முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| வழக்கு எண் | **L.A.O.P** | **104** | **of** | **2024** |
|---|---|---|---|---|

**2025**-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **28**-ம் நாளான இன்று

கோருரிமைதாரர் தரப்பில் **1**வது சாட்சி பத்ரிநாத் என்பவரின் வாக்குமூலமானது **1873**-ம் ஆண்டின் **10**வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திருமதி.**Logeshwari, Translator,** என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பத்ரிநாத் | தந்தை பெயர் | |
| | | | |
| கிராமம் | | தாலுகா | சென்னை |
| தொழில் | **General Manager** | வயது | |

நாள் **20.08.2025 –** கோ.ம.சா.**1 (CW1)**

முதல் விசாரணை

**நான் எனது முதல் விசாரணையில் கோருரிமைதாரர் நிறுவனத்தின் அதிகார பெற்ற நபர் ஆவேன். எனது தரப்பில் முதல் விசாரணக்கான பிரமாண**

வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோ.ம.சா.ஆ.1 முதல் கோ.ம.சா.ஆ.9 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை ( எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் கோருனர் நிறுவனத்தில் மனித வளத்துறையில் பொது மேலாளராக பணிபுரிகிறேன். நான் கோருனர் நிறுவனத்தில் பணிபுரிவதற்கும் எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அதிகாரம் வழங்கப்பட்டதற்கு ஆவணம் குறியீடு செய்துள்ளேன் என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். குறியீடு செய்யவில்லை. வழக்கை பற்றி முழு விவரம் எனக்கு நன்கு தெரியும். மனு சொத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு எந்த தேதி என்று அரசாங்கத்தால் அறிவிப்பு வழங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தேதி ஞாபகம் இல்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்தை மனுதாரர் நிறுவனம் எப்போது கிரையம் பெற்றார்கள் என்றால் 1982–1983 இல் நிறுவனம் தொடங்கப்படும் போது அந்த சொத்தை வாங்கப்பட்டது. நிறுவனம் ஆர்ஜித சொத்தை என்ன தொகைக்கு வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மனு சொத்து அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட நாள் வரை எங்களுடைய அனுபவத்தில் மற்றும் சுவாதீனத்தில் இருந்ததா என்றால் ஆமாம். மனு சொத்திற்கு அரசாங்கம் சதுர

மீட்டருக்கு 1ற்கு ரூபாய் 197.70 என்ற விதத்தில் நஷ்ட ஈடு நிர்ணயித்தது. பொதுவாக அனைத்து சர்வே எண்களுக்கும் இதே தொகை நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரிதான். மனு சொத்து திரும்பெரும்புதுார் சி கிராமத்தில் உள்ளது. மேற்படி கிராமத்திலுள்ள அனைத்து சர்வே எண்களுக்கும் ரூபாய் 197.70 ஒரு சதுரடிக்கு என்று தான் நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரிதான். எங்கள் நிலத்தின் சுற்றுவட்டாரத்தில் உள்ள நிலங்களுக்கு இதே தொகை தான் நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது பிராமண வாக்கமூலத்தில் பத்தி 7 ல் ஒவ்வொரு சர்வே எண்ணுக்கு வெவ்வேறு தொகை நிர்ணயிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருந்த விபரம் தவறானதா என்றால் இல்லை. என்னுடைய பிரமாணவாக்குலத்தில் சிங்கப்பெருமாள் கோயில் சாலை – திருப்பெரும்புதுார் வரை ரூபாய் 1200 ஒரு சதுர அடி என வழிகாட்டு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். கோ.சா ஆ 6 ன் படி 2012 முதல் 2017 வரை உள்ள காலகட்டத்திற்கான வழிகாட்டு மதிப்பு என்றால் சரிதான். 2009இல் நில ஆர்ஜிதம் சம்பந்தமான அறிவிப்பு வழங்கப்பட்டதால் கோ. சா.ஆ 6 இந்த

வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. 2020இல் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதால் கோ.சா.ஆ. 6 இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. 2016–2017 கையகப்படுத்தினார்கள் அப்போதுதான் நஷ்ட ஈடு வழங்கினார்கள். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 13 ல் குறிப்பிட்டுள்ள விவரத்தின்படி 2010ல் நிலம் கையகப்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனால் கோ.சா.ஆ. 6 வழிகாட்டு மதிப்பீடு இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. மனு சொத்தை கோருனர் கிரையம் பெறும் காலகட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமம் என்றால் சரிதான். Highways ரோடு ஆகியவை வந்த பிற்பாடு தான் கொஞ்சம் கொஞ்சமாக அது வளர்ச்சி பெற்றது என்றால் சரிதான் . அதன் பின்பு தான் அந்த இடத்தை சுற்றி பல நிறுவனங்களும், கல்வி நிலையங்களும் வந்தது என்றால் சரிதான். நிலம் கையகம் செய்வதற்கு முன்பு அந்த இடத்தில் பெரிய நிறுவனங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள நிறுவனங்கள் ஐடி பார்க், ஆகியவை மனுச்சொத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்ற விவரத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நிறுவனங்கள் ஐடி பார்க்,

கல்வி நிலையங்கள் ஆகியவை வந்த பின்பு தான் அரசாங்கம் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான அறிவிப்பை கொடுத்தது என்றால் சரிதான். இந்த விவரத்தை நிரூபிக்கும் வகையில் நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்துடன் எந்த ஆவணமாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அறிவிப்பு வெளியிட்டதிலிருந்து நீண்ட நாட்களுக்கு பின்பு தான் நிலம் சுவாதீனம் எடுக்கப்பட்டதாக கூறிய நிலையில் நிலத்தை சுவாதீனம் எடுக்கக் கூடாது என்பதற்கு நாங்கள் மனு எதுவும் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. நான் கூறியுள்ளபடி இழப்பை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன்னா என்றால் செய்துள்ளேன். என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2009,2008 மற்றும் 2015 ல் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த ஆவணங்களை என்ன விலை குறிப்பிட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. நான் கோருகின்ற ரூபாய் 3500 மதிப்பை மேற்படி ஆவணங்களை தாங்கவில்லை என்றால் சரிதான். 1200 ரூபாய் மதிப்பில் ஆவணம் உள்ளது. 2009 வருட ஆவணத்தில் ரூபாய் 862 என்றும், 2008 வருட

ஆவணத்தில் ரூபாய் 675 என்றும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை சந்தை மதிப்பை காண்பிக்க தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சந்தை மதிப்பை காண்பிக்க வேறு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்தள்ள கோ.சா.ஆ.6 ஆவணத்திலேயே இரண்டு வருட காலத்திற்குள் (2017–2018) மூன்றில் ஒரு மடங்கு குறைவாக உள்ளது என்றால் சரிதான். மனு சொத்தை கையகப்படுத்தும் போது அதற்கு இருந்த வழிகாட்டு மதிப்போ அல்லது சந்தை மதிப்போ காண்பிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த உயர் நீதிமன்ற உத்தரவில் இந்நீதிமன்றத்திற்கோ அல்லது நிலம் எடுப்ப அலுவலருக்கோ எந்த விதமாக உத்தரவோ அல்லது வழி காட்டுதலோ வழங்கப்படவில்லை என்றால் சரிதான். உத்தரவு வழங்கும் காலகட்டத்தில் அப்போதிருந்த வழிகாட்டு நெறிமுறைகளின் படி முறையாக இழப்பீடு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த 2008,2009 மற்றும் 2015 ல் அதிகமான தொகைகள் காண்பிக்கப்பட்ட ஆவணங்களை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அந்த காலகட்டத்தில் குறைவான மதிப்பிலும் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. சொத்து

கையகப்படுத்தும் காலகட்டத்தில் பதிவான ஆவணங்களில் மதிப்பு அடிப்படையில் தான் இழப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற எனது பிராமண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மனு சொத்து பொது நலனுக்காக ஆர்ஜிதப்படுத்தப்பட்டதால் நான் கோரும் படி அதிகமான இழப்பீடு அல்லது அதிகமான வட்டியோ கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. இழப்பீடு வழங்கப்பட்ட கால கட்டத்தில் அதற்கான ஆறுதல் தொகையுடன் தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு சரியானது தான் என்றும் அதனால் அதிகமான இழப்பீடு கேட்கும் இந்த கோரிக்கை மனு நிராகரிப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அதிகமான இழப்பீடு தொகையை பெறுவதற்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யததால் அந்த தொகை எங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் தவறு.

(Sd/- Deepthi Arivunithi, M.L.,),
Principal District Court,
Kancheepuram.